6th August 1963]

திரு. கே. ஏ. மதியழகன் : நமது அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் இதே ஜனத்தொகை இருந்தாலும்கூட இங்கே அதிகமாக இடம் கொடுக்காது ஆறு போதும் என்று வற்புறுத்த ஏதேனும் பிரத்யேகக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரத்யேகமான காரணம் எதுவும் இல்லை. எல்லாவற்றையும் ஆராய்ந்த பிறகுதான் ஆறு என்ற முடிவு செய்யப்பட்டது.

திரு. ஜே. மாதா கௌடர் : சட்டசபை ஸ்தாபனத்தைப் பிரிக்கும்போது எந்த வருஷத்திய ஜன கணிதையை வைத்துப் பிரிக்கப்படுகிறது ? புதிய கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிய சென்ஸஸ் கணக்கை வைத்துத்தான் இது எல்லாம் பிரிக்கப்படுகிறது.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அங்கத்தினர் எண்ணிக்கையை 234 ஆக அதிகரித்துவிட்டால் இந்த இடம் போதாது என்று எண்ணுகிறேன். புதியதாக சட்டசபை கட்டிடம் கட்ட உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தால் இந்த இடமே போதும் என்று நினைக்கிறேன். இருந்தாலும் வேறு ஒரு மண்டபம் கட்டும் யோசனை அரசாங்கத்திற்கு இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போது அதிகமாக இடம் ஒதுக்குகிற காரணத்தினால் ஹரிஜனங்களுக்கு அதிகமாக இடம் ஒதுக்கும் எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஜன விகிதாசார அடிப்படையில்தான் இடம் ஒதுக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி : இப்போது தனித் தொகுதிகளாக இருப்பதைப் பொதுத் தொகுதிகள் என்றும், பொதுத் தொகுதிகளாக இருப்பதைத் தனித் தொகுதிகள் என்றும் மாற்றப்படும் என்று சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனித் தொகுதி என்று ஒன்றும் கிடையாது. ஆனால் இப்போதுள்ள அமைப்பை மாற்ற வேண்டுமானால் டீ லிமிடேஷன் குழு அதைக் கவனிக்க வேண்டும். அப்புறம் பார்லிமெண்டு அதை முடிவு செய்ய வேண்டும்.

Farm-Forestry Scheme

* 4 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to implement the Farm-Forestry Scheme in this State; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) & (இ) கிராம நலக்காடுகள் திட்டம் என்பது, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அடங்கிய காட்டு வளத் திட்டங்களுள் ஒன்ருகும். எல்லாப் புறம்போக்கு நிலங்களிலும், தரிசு நிலங்களிலும் விறகு மரக் காடுகளையும் கால்நடைத் தீவன மரங்களையும் வைத்து வளர்த்து, கிராம மக்களின் அன்ருட வாழ்க்கைக்கு வேண்டிய எரிபொருள், கால்நடைத் தீவனம், பசுந்தாள் உரம் ஆகியவற்றிற்கு வகை செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டகால அளவில் மொத்தம் 75 லட்சம் ரூபாய் செலவில் 2.26 லட்சம் ஏகராவுக்கு மேல் விறகு மரங்களையும், கால்நடைத் தீவன மரங்களையும் வைத்து வளர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களின் சம்மதத்துடன் கிராமங்களிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் (50 ஏகரா அல்லது அதற்கு மேல் தொகுதியாகவுள்ள பகுதிகளில்) எல்லாவற்றிலும் அவ்வாறு மரங்களை வைத்துப் பயரிடத் திட்டமிட்டுள்ளது. 1961-62, 1962-63-ம் ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் வளர்க்கப்பட்ட மரங்கள் பற்றிய தகவல் வருமாறு:—

1961-62	6,658 ஏகரா.
1962-63	6,033 ஏகரா.

1963-64-ல் 21,300 ஏகரா நிலத்தில் இத்தகைய மரங்களை வைத்து வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: தலைவர் அவர்களே, இந்தக் காடுகளில் எந்த எந்த மரங்கள் வைத்து வளர்க்க உத்தேசம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: என்னுடைய பதிலிலேயே அதைக் குறிப்பிட்டிருக்கிறேன். கால்நடைகளுக்குத் தீவனம் கொடுக்கக்கூடிய மரங்கள், பசுந்தாள் உரம் கொடுக்கக்கூடிய மரங்கள், விறகுக்குப் பயன்படக்கூடிய மரங்கள் ஆகியவற்றை வைத்துப் பயிர் செய்கிருேம்.

திரு. ஜே. மாதா கௌடர்: அமைச்சர் அவர்களுடைய பதிலில் மரம் நட்டு அவற்றின் அடியிலேயே புல் வளர்க்கப்படும் என்று தெரிவித்தார்கள். மரத்தின் நிழலில் புல் வளருவது கஷ்டமாக இருக்கும். ஆகையால் பஞ்சாயத்தில் மரம் வளர்ப்பதைப் போலவே தனியாகப் புல் வளர்ப்பதற்கும் ஏதேனும் ஏற்பாடு செய்யப்படுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: புல் தனியாக வளர்க்க முன்வந்தால் அவர்களுக்கு அவ்வாறு அனுமதி கொடுக்க ஆட்சேபனை இல்லை.

6th August 1963]

திரு. செ. மாதவன் : இந்தத் திட்டத்தை தென் மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க உத்தேசம் உண்டா? இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்தத் திட்டம் பரிட்சார்த்தமாக மூன்று ஜில்லாக்களில்—அதுவும் ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு ப்ளாக்குகளில் ஏற்படுத்தியிருக்கிறேம். பரிட்சார்த்தமாக ஏற்படுத்தப்பட்ட இந்தத் திட்டம் வெற்றி அடையுமானல் எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் பரிட்சார்த்தமான மூன்று ஜில்லாக்களில் மட்டும் அதுவும் ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு ப்ளாக்குகளில் மட்டும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னர்கள். இதில் வடாற்காடு மாவட்டம் சேர்ந்திருக்கிறதா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : வடாற்காடு மாவட்டம் சேர்ந்திருக்கிறது. அந்த மாவட்டத்தைச் சேர்ந்த வேம்பகம், பரம்பானல்லூர் ஆகிய இரண்டு ப்ளாக்குகளில் நடத்தப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : எந்த எந்த ஜில்லாக்களில் எந்த எந்த ப்ளாக்குகளில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுகிறது என்று சொல்வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : செங்கல்பட்டு ஜில்லாவில் ஸ்ரீபெரம்புதூர், தில்லைநாயகன் பாளையம், வடாற்காடு ஜில்லாவில் வேம்பகம், பரம்பானல்லூர், சேலம் ஜில்லாவில் ஆத்தூர், பிடமனயகன் பாளையம் ஆகிய இடங்களில் இந்தத் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : திருநெல்வேலி ஜில்லாவில் இந்த வருஷமே அமுல் நடத்தப்படுகிறதென்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இந்த வருஷம் அவர்களாகவே செய்வார்கள். இந்த ஸ்கீமின்கீழ் வராது என்று நான் நினைக்கிறேன்.

Mat-weaving and Doll-making centres

* 5 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a Mat-weaving and Doll-making centre for the benefit of the women members of the families of goldsmiths in the North Arcot district?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.